



தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கிழக்கு தாம்பரத்தில் பகுதி கழக செயலாளர்–5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன் தலைமையிலும் பகுதி அவைத்தலைவர் வி.முனுசாமி வரவேற்பிலும் வே.இராசேந்திரன், பி ஜோதிகுமார், எம்.சீனிவாசகுமார், கே. பேகம், டி.ஆர். நரசிம்மன், ஏ.நசீர், விஜி.சிவகுமார், அ.லோகேஷ்குமார், கே.ரமேஷ்பாபு, சீ.இளஞ்செழியன், டி.வி.கே.முருகன், வ.லோகநாதன், கு.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழக பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, எம்.பி., கழக கொள்கை பரப்பு இணை செயலாளர், தமிழ்நாடு தோல் உற்பத்தி தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி, தாம்பரம் மாநகர கழக செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி 1000 பேருக்கு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். உடன் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், வி.கார்த்திக், எஸ்.கார்த்திக், மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமூலம், கொடி ஆர்.தாமோதரன், கார்த்திக், சசிகலா, லிங்கேஸ்வரி பாபு, செ.சுரேஷ் உள்ளிட்டோர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (10.07.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் திருமதி த. ரத்னா, தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் நிர்வாக இயக்குநர் முனைவர் ச.விசாகன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட

# சிந்தாதிரிப்பேட்டையில் - நவீன மீன் அங்காடி கட்டடம் கட்டும் பணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 11-

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு62க்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டையில் சிங்கார சென்னை 2.0 மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் 102 கடைகளுடன் புதிதாக நவீன மீன் அங்காடி கட்டடம் கட்டும் பணியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.07.2023) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்த நவீன மீன் அங்காடி கட்டுவதற்கான திட்ட வரைபடத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு இப்பணிகளை குறித்த காலத்தில் முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இராயபுரம் மண்டலம், வார்டு62க்குட்பட்ட சிந்தாதிரிப்பேட்டையில் சிங்கார சென்னை 2.0 திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் 1,247 ச.மீ. பரப்பளவுள்ள இடத்தில் 1,022 ச.மீ. பரப்பளவில் 102 கடைகளுடன் கூடிய நவீன மீன் அங்காடி கட்டடமானது கட்டப்பட உள்ளது. இந்தக் கட்டடமானது, புயலினால் சேதமடையாமல் இருக்கும் வகையில் டென்சைல் கட்டுமானத்துடன் கூடிய மேற்கூரை, மீன் கழிவுகளை வெளியேற்றும் வகையில் சுத்திகரிப்பு நிலையம், குப்பைகளை எளிதாக அகற்றுவதற்கான அமைப்புகள் மற்றும் வழிகாட்டி பலகைகள், மீன் கழிவுநீரினை பயோ டைஜிஸ்ட்க்கு கொண்டு செல்ல பிரத்யேக வடிகால் மற்றும் வாகன நிறுத்தம் போன்ற அம்சங்களுடன் அமைக்கப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தேனாம்பேட்டை மண்டலம், வார்டு115க்குட்பட்ட பீட்டர்ஸ் சாலையில் ரூ.2.89 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மழைநீர் வடிகாலானது பீட்டர்ஸ் சாலையில் நியூ காலேஜ் பகுதியிலிருந்து கான்ரான்ஸ்மித் சாலை வரை, மோனகன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலிருந்து கான்ரான்ஸ்மித் சாலை வரை 696 மீ. நீளத்திலும், ஆர்.ஓ.பி. 6வது தெருவில் 113 மீ. நீளத்திலும் அமைக்கப்பட்டு வரும் விவரத்தினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து, இப்பணிகளை தரமாகவும், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக முடித்திடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், (வடக்கு), எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (தெற்கு), நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், மாமன்ற உறுப்பினர்கள் ரா.ஜெகதீசன் மற்றும் திருமதி வெ.ஈஸ்வரி வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



திருவள்ளூர், ஜூலை 11

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் முதமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாக் கொண்டு புகைப்படத்து டன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திலுள்ள கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிகளிலும் 2023-ஆம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணி வாக்குச்சாவடி நிலை அலுவலரால் வீட்டுக்கு வீடு சரிபார்ப்பு பணிகள் 21.07.2023 வெள்ளி முதல் 21.08.2023 திங்கள் வரை நடைபெறவுள்ளது.

அதன் அடிப்படையில் 2024-ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்கள் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சோக்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்யவோ, திருத்தங்கள் செய்யவோ, இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர் தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலிடம் அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.

மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியில் மற்றும் சிறப்பு முகாம்களில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளைச் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) முன்னாள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பி.எல்.ஏ. 2-க்கள் இந்த பணியினை முழுமையாக உடன் இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள பி.எல்.ஏ. உடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.10.80 கோடி மதிப்பிலான பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகள்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை 11-

பெரம்பலூர்மாவட்டம், வேப்பூர்ஊராட்சிஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ரூ.10.80கோடி மதிப்பிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை துவக்கி வைத்தார்.

கரம்பியம்சின்னஏரிஅருகில்நபார்டுதிட்டத்தின்கீழ் ரூ.4 கோடி மதிப்பீட்டில் மேலமாத்தூர் ஆதனூர் சாலையில் உயர்மட்ட பாலம்கட்டும்பணியையும், கரம்பியம் முதல் பெரியம் மாபாளையம் வரை கிராம சாலைஅமைக்கும்பணியையும், மூங்கில்பாடிஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.85.48 லட்சம் மதிப்பீட்டில் குன்னம் முதல் மூங்கில்பாடி வரை சாலை அமைக்கும் பணியையும், ஒதியம் ஊராட்சிக்குட்பட்ட சமத்துவபுரத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின்மூலம் ரூ.1.06 கோடி மதிப்பீட்டில் பழுதுநிலையிலிருக்கும்வீடுகள், சாலைகள் உள்ளிட்டவைகளின் பழுது நீக்கும் வகையில்புனரமைப்புபணிகளையும்,

அசூர் பிரிவு சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில்அசூர்பேருந்து நிழற்குடை அமைக்கும் பணியையும், அந்தூர் மெயின் ரோடு பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள்மேம்பாட்டுதிட்டத்தின் மூலம் ரூ.16.21 லட்சம் மதிப்பீட்டில் அந்தூர் பொது தெருவில் சாலை அமைக்கும் பணியையும், ஆய்குடி பகுதியில் முதலமைச்சரின்கிராமசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம்ரூ.56.10லட்சம்மதிப்பீட்டில் கல்லம்புதூர் முதல் ஆய்குடி வரை சாலை அமைக்கும் பணியையும், கல்லம்புதூர் பகுதியில் முதலமைச்சரின் கிராம சாலைகள்மேம்பாட்டுதிட்டத்தின் மூலம்ரூ.8.88 மதிப்பீட்டில் கல்லம்புதூர் பொது இணைப்பு சாலை அமைக்கும் பணியையும்,

முதலமைச்சரின் கிராம சாலைகள்மேம்பாட்டுதிட்டத்தின் மூலம் ரூ.42.23 லட்சம் மதிப்பீட்டில் கல்லம்புதூர் ஆதிதிராவிடர் மயான சாலைஅமைக்கும்பணியையும், பீல்வாடி பகுதியில்முதலமைச்சரின் கிராம சாலைகள்மேம்பாட்டுதிட்டத்தின் மூலம்ரூ.45.04லட்சம்மதிப்பீட்டில்பீல்வாடி முதல்அருமடல் வரை சாலை அமைக்கும் பணியையும், பேரளி மெயின்ரோடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் பேரளி பேருந்துநிழற்குடைஅமைக்கும்பணியையும், பனங்கூர் பேருந்து நிறுத்தம் அருகில் முதலமைச்ச ரின் கிராம சாலைகள்மேம்பாட்டுதிட்டத்தின்மூலம்ரூ.2.71கோடி மதிப்பீட்டில் பேரளி முதல் பனங்கூர் வரை சாலை அமைக்கும் பணியையும்,

மருவத்தூர் பி.சி தெருவில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் மூலம் ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியையும் என மொத்தம் ரூ.10.80கோடிமதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து பணிகளைவிரைந்துமுடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வேப்பூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, நபார்டு மற்றும் கிராம சாலைகள் கோட்டபொறியாளர்(நெ) பெ. வடிவேல்(திருச்சி), கட்டுமானம்மற்றும்பராமரிப்பு கோட்டபொறியாளர்(நெ) கலைவாணி(பெரம்பலூர்), நபார்டு மற்றும் கிராம சாலை உதவி கோட்ட பொறியாளர் (நெ) ரா.ஹரிகிருஷ்ணன்(பெரம்பலூர்), கட்டுமானம் மற்றும் பராமரிப்புஉதவிகோட்டபொறியாளர்(நெ) தமிழ் அமுதன் (குன்னம்) மற்றும் உதவி பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தா. இளையஅருணா அறிவிப்பு



சென்னை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் 12-7 -20 23 புதன்கிழமை மாலை 5 மணி அளவில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை அப்போலோ மருத்துவமனை அருகில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையிலும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா. மூர்த்தி, ஜே. ஜே.எபினேசர், ஆர்.டி.சேகர் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளதால் சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பகுதி செயலாளர்கள் மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், ஆகியோர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**பொருள் :** கழக ஆக்கப்பணிகள்.

**தா.இளைய அருணா**
செயலாளர், சென்னை வடக்கு மாவட்ட திமுக.

### ஆவடி கழகத் தோழர்கள்

### கே.தாமரைச்செல்வன் - கே.அரிதாஸின் தந்தை

# கழக முன்னோடி பி.காசி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, ஜூலை 11

ஆவடி பகுதி கழகத் தோழர்கள் கே.தாமரைச் செல்வன், கே.அரிதாஸ் ஆகியோரின் தந்தையும் - கழக முன்னோடியுமான பி.காசி அவர்கள் நேற்று (10.7.2023- திங்கட் கிழமை) காலை 9.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 59.

தகவல் அறிந்து ஏராளமான கழக முன்னணியினரும், நிர்வாகிகளும், தோழர்களும் - எண். 1/42, சின்னம்மான் கோயில் தெரு, கண்ணப்பாளையம், ஆவடி, சென்னை - 71 எனும் முகவரியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

நேற்று மாலை 5.00 மணியளவில் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. இறுதி ஊர்வலம் மற்றும் இறுதிச் சடங்கிலும் கழகத்தினர் ஏராளமானோர் கலந்துகொண்டு, அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.



பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செம்பரம்பாக்கம் ஊராட்சியில் 11.43 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பத்தாயிரம் லிட்டர் கொள்ளளவு மேல் நிலை குடிநீர் தொட்டியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி வின்செண்ட், பொதுக்குழு உறுப்பினர் வி.குமார், ஒன்றிய நிர்வாகிகள் டி. அண்ணாமலை, வி.ஜனார்த்தனன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், பிரபாகரன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், டி.குமரேசன், திருமலைராஜ் , எம்.ராம்பாபு , வி.தணிகாசலம், சாய் மோகன், கே.ஜி.ஆர். ஸ்டாலின், ந.சா.பாலன், கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் இராஜாமணி, சாரங்கன், கேசவன், பரிமேலழகன், லிங்கேஷ், காந்தி, திலீப் குமார், தேவதாஸ், விநாயகம், விக்னேஷ், விக்கி உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் உள்ளனர்.



சென்னை தெற்கு மாவட்டம், காரம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் காரம்பாக்கம் சா.அன்பழகனின் 13 ஆம் நாள் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி காரம்பாக்கத்தில் மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் இரா.சீனிவாசன், இ.ஜெயவேல், இரா.ரமேஷ் ஆகியோர் வரவேற்புரையில் ஹேமலதா கணபதி எம்.சி, சி.சுந்தர், மு.ஆறுமுகம், ச.ரவி, க.கைலாசம், இ.பார்த்திபன், இரா.ராஜேந்திரன், மா.பா.சித்ராலயம், சேகரன், நா.துரை, ஆ.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி படத்தினை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினார். இதில் மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி, ஆலப்பாக்கம் கு.சண்முகம் எம்.சி, எஸ்.அப்துல்காதர், அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, வ.செல்வகுமார் எம்.சி மற்றும் பலர் கலந்து கொண்டனர். சா.ஆனந்தன், அ.ராகேஷ் அன்பழகன் ஆகியோர் நன்றி கூறினர்.